# வகுப்பு - 10

## இயல் - 1

## உரைநடை உலகம்

### தமிழ்ச்சொல் வளம்

**குறுவினா**

**I 1. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக?**

**சுள்ளி** : காய்ந்த குச்சு
**விறகு** : காய்ந்த சிறுகிளை
**வெங்கழி** : காய்ந்த கழி
**கட்டை** : காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

**2. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

**அரும்பு** : பூவின் தோற்றநிலை
**போது** : பூ விரியத் தொடங்கும் நிலை
**மலர்** : பூவின் மலர்ந்தநிலை
**செம்மல்** : மரம், செடியிலிருந்து பூ கீழே விழுந்த நிலை

**II. சிறுவினா**

**1. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது‘**

**இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.**

- நெல் நாற்றுகள் வயலில் நடப்பட்டன.
- வாழைக்கன்று நட்டு பராமரிக்கப்பட்டது.
- மிளகாய்ச் செடி வரிசையாக நடப்பட்டது.
- தென்னம்பிள்ளை ஆழமாக நட்டு வைக்கப்பட்டது.
- சோள பைங்கூழ் காட்டில் விதைக்கப்பட்டது.

**2. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன**

**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன**

**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன**

**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களை ச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியானவை** : ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன

**பிழையானவை** : ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன
ஏனெனில் பல சீப்புகள் சேர்ந்ததே ஒரு தாறு என்று கூறுவோம், இங்கு ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் எனக் கூறியுள்ளதால் இத்தொடர் பிழையானதாகும்.

**3. பெருந்தமிழர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார் பற்றிக் குறிப்பு எழுதுக.**

- ✡ தமிழாசிரியர், நூலாக்கப்பணிகளை விரும்பிச் செய்பவர்
- ✡ சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
- ✡ திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லுரில் 'திருவள்ளுவர் தவச்சாலை' ஒன்றை அமைத்திருப்பவர், பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்.
- ✡ தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கி வருபவர், தமிழ் வழித்திருமணங்களை நடத்தி வருபவர். விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்து விடக்கூடாது என்று எண்ணியவர். தமிழ்த்தென்றல் திரு. வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்.
- ✡ இன்றளவும் இவ்வாறே எழுதித் தமிழுக்குத் தனிப்பெரும் புகழை நல்கி வருபவர்.

**4. தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கைளை எழுதுக**

**ஒரு தாவரத்தின அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.**

| | | |
|---|---|---|
| நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி | : | **தாள்** |
| கீரை, வாழை முதலியவற்றின் அடி | : | **தண்டு** |
| நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி | : | **கோல்** |
| குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி | : | **தூறு** |
| கம்பு, சோளம் முதலியவற்றின் அடி | : | **தட்டு அல்லது தட்டை** |
| கரும்பின் அடி | : | **கழி** |
| மூங்கிலின் அடி | : | **கழை** |
| புளி, வேம்பு முதலியவற்றின் அடி | : | **அடி** |

**5. தாவரங்களின் இலை. கொழுந்து வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக,**

**இலை வகை : தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.**

| | | |
|---|---|---|
| **இலை** | : | புளி, வேம்பு முதலியவற்றின் இலை. |
| **தாள்** | : | நெல், புல் முதலியவற்றின் இலை. |
| **தோகை** | : | சோளம், கரும்பு முதலியவற்றின் இலை. |
| **ஓலை** | : | தென்னை, பனை முதலியவற்றின் இலை. |
| **சண்டு** | : | காய்ந்த தாளும் தோகையும். |
| **சருகு** | : | காய்ந்த இலை. |
| **கொழுந்து வகை** | : | தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள். |
| **துளிர் அல்லது தளிர்** | : | நெல், புல் முதலியவற்றின் கொழுந்து. |
| **முறி அல்லது கொழுந்து** | : | புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து. |
| **குருத்து** | : | சோளம், கரும்பு தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து. |
| **கொழுந்தாடை** | : | கரும்பின் நுனிப்பகுதி. |

**6. தானியங்களுக்கு வழங்கும் சொற்களை விளக்கி எழுதுக,**

**தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்**

| | | |
|---|---|---|
| **கூலம்** | : | நெல், புல் (கம்பு) முதலிய தானியங்கள். |
| **பயறு** | : | அவரை, உளுந்து முதலியவை. |
| **கடலை** | : | வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை. |
| **விதை** | : | கத்திரி, மிளகாய் முதலியவற்றின் வித்து. |
| **காழ்** | : | புளி. காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து. |
| **முத்து** | : | வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து. |
| **கொட்டை** | : | மா, பனை முதலியவற்றின் வித்து. |
| **தேங்காய்** | : | தென்னையின் வித்து. |
| **முதிரை** | : | அவரை, துவரை முதலிய பயறுகள். |

**7. தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்களை விளக்கி எழுதுக,**

**தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்களையோ, கனிகளையோ) சொற்கள் :**

| | | |
|---|---|---|
| **கொத்து** | : | அவரை, துவரை முதலியவற்றின் குலை |
| **குலை** | : | கொடி, முந்திரி முதலியவற்றின் குலை |
| **தாறு** | : | வாழைக்குலை |
| **கதிர்** | : | கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர் |
| **அலகு அல்லது குரல்** | : | நெல், தினை முதலியவற்றின் கதிர் |

**சீப்பு** : வாழைத்தாற்றின் பகுதி

**நெடுவினா**

***1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.***

***தமிழின் சொல்வளம்:***

*தமிழின் சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொது என்றாலும் தமிழ் மட்டுமே. அதில் தலைசிறந்ததாகும். தமிழின் சொல்வளத்தை நாம் பல துறைகளிலும் காணலாம்.*

*ஆங்கிலம் போன்ற மொழிகளில் இலையைக் குறிக்க ஒரே சொல் மட்டுமே உள்ளது. ஆனால் தமிழ் மக்கள் இலையை அதன் வன்மை, மென்மை இவற்றைக் கொண்டு இலை, தோகை, ஓலை எனப்பாகுபாடு செய்துள்ளனர். இது மட்டுமின்றி தாவரங்கள், மணிவகை, இளம்பயிர்வகை, காய்கனி வகை, அடி, கிளை, கொழுந்து என அனைத்து உறுப்புகளுக்கும் சொற்களைப் பகுத்து வைத்துள்ளனர்.*

***பூவின் நிலைகளைக் குறிக்கும்சொற்கள்:***

***அரும்பு** : பூவின் தோற்றநிலை, போது பூ விரியத் தொடங்கும் நிலை, **மலர் :** பூ வின் மலர்ந்த நிலை **வீ :** மரம் செடியிலிருந்து பூ கீழே விழுந்த நிலை , **செம்மல் :** பூ வாடின நிலை.*

**தமிழின் பொருள் வளம் :**

*தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையது என்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல் வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் உள்ளன. அவற்றில் சம்பாவில் மட்டும் ஆவிரம் பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச் சம்பா, சீரக சம்பா, முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ் நாட்டிலன்றி வேறொங்கும் விளைவதில்லை,*

*பண்டைத்தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக அளந்தறிவதற்கு உதவுவது மொழியேயாகும்.*

Next Generation School

Pinkz Public School
Next Generation School